
kauvery hospital



வாழ்வின்

# KODAI

கொடை

**K**auvery **O**rgan **D**onation **A**wareness **I**nitiative

## THE GIFT OF LIFE

## உறுப்பு தானத்தை ஏன்  ஊக்குவிக்க வேண்டும்?

இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம் ஆகிய உறுப்புகளின் செயலிழப்பு இந்தியாவில் அதிகரித்து வருகின்றன. இது போன்ற பாதிப்புக்குள்ளான நோயாளிகளின் ஆரோக்கியம் நாளுக்கு நாள் மோசமடைந்து, அன்றாட வாழ்வின் செயல்பாடுகள் பெரும் சிரமமாகின்றன. எந்நேரமும் உயிர் பிரிய கூடும் என்ற நிச்சயமின்மை அதிகரிக்கிறது. மேலும் பொருளாதார சுமை காலப்போக்கில் சமாளிக்க முடியாத அளவு அதிகரிக்கிறது.

## உயிர்காக்கும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை

நோயாளிகளின் நல்வாழ்வுக்கு, உறுப்பு மாற்றுத் தீர்வே ஒரே வழி. இத்தகைய நோயாளிகள் ஆயிரக்கணக்கானோர் மாற்று உறுப்புக்காகக் காத்திருக்கின்றனர்.

உறுப்பு தானம் செய்ய நோயாளிகளின் குடும்பத்தினர் பலர் முன்வந்தாலும், அவர்களுக்கு உடல்நலக் கோளாறுகள் இருந்தால், உறுப்பு தானம் தர  தகுதியற்றவராகின்றனர். இத்தகைய உறுப்பு பற்றாக்குறை சட்டவிரோத உறுப்பு வர்த்தகத்தையும் கடத்தலையும் ஊக்குவிக்கிறது.

## மூளை சாவு அடைந்தோர் ஏன் உறுப்பு தானம் செய்ய வேண்டும்?

நோயாளிகளின் உறவினர்கள், தங்களது சிறுநீரகத்தையோ அல்லது கல்லீரலின் ஒரு பகுதியையோ வழங்க முன்வந்தாலும், மூளை சாவு அடைந்த பின் தானம் செய்பவர்கள் அதிகரித்தால் உறவினர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவை தவிர்க்கப்படும் மற்றும் உறுப்பு தானம் கிடைக்காமல் காத்திருக்கும் நோயாளிககளின் வாழ்வு காப்பாற்றப்படும்.



## நோயாளிகளின் தற்போதைய நிலை

தமிழ்நாட்டில் 2024 வரை, மாற்று உறுப்பு வேண்டி சிறுநீரகத்துக்கு 6,332 பேர், கல்லீரலுக்கு 438 பேர், இதயத்துக்கு 76 பேர், நுரையீரலுக்கு 64 பேர், கைகளுக்கு 27 பேர், சிறுகுடலுக்கு 2 பேர், பதிவு செய்து தங்கள் உயிருக்குப் போராடிக் கொண்டு  காத்திருக்கின்றனர்.

மூளைசாவு அடைந்த ஒருவர் இறக்கும் முன் உறுப்பு தானம் செய்தால், எட்டு உயிர்களைக் காப்பாற்ற முடியும். எனினும், 2023 ஆம் ஆண்டில் மூளைசாவு அடைந்து உறுப்பு தானம் செய்தவர்கள் எண்ணிக்கை வெறும் 178 மட்டுமே.



## உறுப்பு தானம் செய்வதில் உள்ள  தடைகள்

ஒருவர் எதிர்பாராத விதமாக மூளை சாவு அடைந்தாலும், அவர்களின் குடும்பங்கள் உறுப்பு தானம் குறித்த தவறான கருத்துகள், பயம் , மூட நம்பிக்கைகள்,  மற்றும் அறியாமை காரணமாக, உறுப்பு தானம் செய்ய முன் வருவதில்லை. உறுப்பு தானத்தின் நல்விளைவுகள் பற்றி அனைவருக்கும் தெரிவிப்பதன் மூலம் பல நோயாளிகளின் வாழ்வைக் காக்க முடியும்.

## யாரெல்லாம் உறுப்பு தானம் செய்ய முடியும்? மூளைச்சாவு என்றால் என்ன?

ஒருவர் சுயநினைவு இழந்து, மூளை தண்டு வடத்தின் செயல் தன்மை மீள முடியாத அளவுக்கு அற்றுப் போய், சுயமாக சுவாசிக்க முடியாமல் போவதே மூளைச்சாவு எனப்படும். கடுமையாக தலையில் அடிபடும் காயங்களாலோ, தீவிரமான பக்கவாதம், மூளையில் கட்டி மற்றும் மூளையில் உள்ள ரத்த நாளங்கள் வெடிப்பது போன்ற நிலைகளாலோ மூளைச்சாவு அடைந்து மூளை செயலிழந்தாலும், செயற்கை சுவாசம் மற்றும் இதயத்தை இயங்க வைக்கும் மருந்துகள் மூலம் பிற உறுப்புகளை அவர்கள் உயிர் இழக்கும் வரை செயல்பட வைக்கலாம்.

இவர்களின் மூளை செயல்பாட்டை மீட்க கண்டிப்பாக முடியாது. மருந்துகள் மற்றும் செயற்கை சுவாசம் மூலம் தற்காலிகமாக உயிரை காப்பாற்றினாலும் அவர்கள் எந்நேரமும் இதய செயலிழப்பால் மரணிக்க நேரிடும்.



## உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவம்:

உறுப்பு தானம் செய்யாவிட்டால் மூளைச்சாவு அடைந்தவர் இறந்தவுடன் உறுப்புகள் அனைத்தும் வீணாகிவிடும். அதனால் சரியான நேரத்தில் தானம் செய்தால் உறுப்புகளை தேவைப்படும் நோயாளிகளுக்கு உயிர் காக்கும் கொடையாக அளிப்பதன் மூலம் பலரின் உடலில் உங்கள் அன்புக்குரியவர்கள் உறுப்புகளின் மூலம் உயிர் வாழ்வர். உறுப்புகளை தானம் செய்வது அவர்களின் குடும்பத்தினர் தாமே முன் வந்து எடுக்கும் ஒருதனிப்பட்ட முடிவு. உறுப்பு தானம் பெறும் முன் பெறப்படும் ஒப்புதல் அரசாங்க அனுமதியுடன், குடும்பத்தினரின் முழு சம்மதத்துடன் எந்த வித அழுத்தமும் இன்றி, உறுப்பு கொடையாளி மற்றும் அவரது அன்புக்குரியவர்களுக்கு முழு மரியாதையுடன் மட்டுமே பெறப்படும்

## உறுப்பு தான உறுதிமொழி என்றால் என்ன?

உறுப்பு தானம் செய்யும் எண்ணம் உள்ள அனைவருமே தங்களது உறுப்புகளை தானம் செய்ய உறுதிமொழி ஏற்றுக்கொள்ள முடியும். இவ்உறுதிமொழியை அரசின் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம்பதிவு செய்யும் போது, நீங்கள் ஒருகொடையாளி அடையாள அட்டையைப் (DONOR CARD) பெறுவீர்கள். இந்த அட்டை உங்களது உறுப்புகளைத் தானம் செய்ய உங்களுக்கு விருப்பம் உள்ளது என்பதை உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தெரிவிக்கும் நினைவூட்டல் சின்னமாகவும் அவர்களை உறுப்புதானம் செய்யத் தூண்டும் ஒரு தூண்டுகோலாகவும் இருக்கும். கொடையாளி அடையாள அட்டை ஒரு சட்ட ஆவணம் அல்ல என்பதை அறிவது முக்கியம்.

சட்டப்படி, ஒருவரின் உறுப்புகளை தானம் செய்வதற்கான இறுதி முடிவை அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே எடுக்க முடியும். ஒருவர் உறுப்புதான உறுதிமொழி ஏற்றிருந்தாலும் கூட, அவர்கள் குடும்பத்தாரின் ஒப்புதல் இன்றி எந்தவொரு உறுப்பு தானமும் நடைபெறாது. எனவே, உறுப்பு தானம் செய்யும் விருப்பத்தை குடும்பத்தினருடன் தெரிவிப்பது மிக மிக அவசியம்.

## KODAI (கொடை)– காவேரி மருத்துவமனையின் உறுப்பு தான விழிப்புணர்வு முன்னெடுப்பு

1994 ஆகஸ்ட் 3 அன்று, நாட்டின் முதல் வெற்றிகரமான இதய மாற்று அறுவை சிகிச்சை செய்த நாளை இந்தியாவின் தேசிய உறுப்பு தான நாளாக கொண்டாடுகிறோம். மேலும், ஆகஸ்ட் 13ம் தேதி, உலகளாவிய உலக உறுப்பு தான நாளாக கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு, காவேரி மருத்துவமனை சார்பில் ஆகஸ்ட் 3 முதல் 13 வரை – KODAI (KAUVERY ORGAN DONATION AWARENESS INITIATIVE) (கொடை) என்ற காவேரி மருத்துவமனையின் உறுப்பு தான விழிப்புணர்வு முன்னெடுப்பு மூலம் உறுப்பு தான விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்படுகிறது.

கொடை என்பது தமிழில் 'பரிசு' அல்லது 'தானம்' என்று பொருள்படும். ஒருவரின் உறுப்பு தானத்தின் மூலம் பலருக்கும் வாழ்க்கையைப் பரிசாக அளிப்பதை இது பிரதிபலிக்கிறது. திருச்சியில் தென்னூர், கண்டோன்மெண்ட், ஹார்ட் சிட்டி, மற்றும் மா காவேரியில் உள்ள காவேரி மருத்துவமனைகளில் உங்களுக்கு உதவ உறுப்பு தான உறுதி மொழி பதிவகங்கள் (DONAR BOOTHS) அமைக்கப்பட்டுள்ளன.

உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் உறுப்பு தானத்தின் தேவை பற்றியும், அதனால் ஏற்படும் பலன்கள் பற்றியும் பகிர்ந்து கொள்ளவும். உங்கள் உற்றார், உறவினர் நண்பர் அனைவரையும் உறுப்பு தானம் செய்ய உறுதிமொழி ஏற்க வலியுறுத்துங்கள். உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு எதிர்பாராத விதமாக மூளைச்சாவு ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்தினரை உறுப்பு தானம் செய்ய ஊக்குவிக்கவும்.



## உறுப்பு தானம் பற்றிய குழப்பங்களும் உண்மைகளும்

### மூளை இறப்பிலிருந்து ஒருவர் மீண்டுவிட முடியுமா?

மூளை இறப்பிலிருந்து மீள்வது சாத்தியமற்றது. கோமாவில் மூளை செயல்பாடுகள் ஓரளவுக்கு இருப்பதால் மீள்வதற்கான சாத்தியக்கூறுகள் சிறிதேனும் இருக்கவாய்ப்புண்டு. ஆனால் மூளை இறப்பு என்பது மூளை செயல்பாடுகளின் முற்றிலும் செயல்படாத தன்மையைக் குறிக்கிறது. இவ்வாறு மூளைசாவு அடைந்த ஒருநபர் சட்டப்பூர்வமாகவும் மருத்துவரீதியிலும் இறந்தவராக கருதப்படுகிறார். இதை உறுதிசெய்ய மூளையின் செயல்பாட்டை பரிசோதிக்கும் பல்வேறு தீவிரமான சோதனைகள் ஆறு மணிநேர இடைவெளியில் இருமுறை நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் உறுதி செய்யப்பட்ட பின்னே ஒருவர் மூளைசாவு அடைந்ததாக அறிவிக்கப்படுகிறார்.

### உறுப்பு தானம் செய்ய ஒப்புக்கொண்டால், மருத்துவர்கள் நோயாளியை காப்பாற்ற முயற்சிக்கமாட்டார்கள்.

மருத்துவகுழுவின் முன்னுரிமை எப்போதும் நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதாகும். நோயாளியைப் பராமரிக்கும் மருத்துவரின் பங்கு இறுதிவரை கண்டிப்பாக இருக்கும். உறுப்பு தானத்திற்கு ஒப்புக்கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும் எந்த ஒரு மருத்துவமனையோ, மருத்துவரோ நோயாளியின் உயிரைகாக்கும் கடமையில் இருந்து தவறுவதில்லை. இதுவே சட்டமும் ஆகும்.

### உறுப்பு தானம் செய்தால் அறுவை சிகிச்சைகள் முடியும் வரை மருத்துவமனைக்கு அதிகபணம் செலுத்தவேண்டியிருக்கும்.

மூளைச்சாவு அறிவிக்கப்பட்ட பின்னர், உறுப்பு தானம் செய்ய முன்வந்தால் அறுவை சிகிச்சைகள் முடியும் வரை, மருத்துவமனை கொடையாளியின் செலவுகளை முழுவதுமாக ஏற்கும்.

### உறுப்புகளை தானம் செய்தால் அடுத்த பிறவியில் உறுப்பு இல்லாமல் பிறக்க நேரிடும்.

மூளைச்சாவு அடைந்தவர்கள் உறுப்புதானம் செய்யாமல் போனாலும் மரணம் ஏற்பட்ட நொடியே, உறுப்புகள் தன்னுடைய செயல் இழந்து போகும். அந்த உறுப்புகளை அடுத்த பிறவிக்கு எப்படி எடுத்தது செல்ல முடியும்?

ஆனால் மண்ணோ, தீயோ உண்ணும் உறுப்புகளை அடுத்தவருக்குத் தானம் செய்யும் புண்ணியம் செய்தவர்களுக்கு மறுபிறவி என்று ஒன்று இருப்பின் உறுப்பில்லாமல் பிறக்கும் தண்டனையையா இறைவன் தருவான்?

### மதங்கள் உறுப்பு தானத்தை தடை செய்கின்றன.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கிய, பௌத்த மற்றும் ஜைன மதங்களும் அவற்றின் தலைவர்களும் உறுப்பு தானத்தை ஆதரித்துள்ளனர். எந்த ஒரு மதத்தின் புனிதநூல்களுமே உறுப்பு தானத்தை தடை செய்வதில்லை.

### உறுப்பு தானம் உடலை சிதைக்கும்.

மார்பின் உச்சியிலிருந்து தொப்புள் வரை கிழிக்கப்படும் ஒரே ஒரு சீரான வெட்டு மூலம் மிகவும் கவனமான முறையில் உறுப்புகள் அகற்றப்படுகின்றன. இந்த வெட்டும் உறுப்பு தான அறுவை சிகிச்சை முடிந்த பின் தைக்கப்படும். இது உடலை சிதைக்காது. மேலும், எரிப்பதற்கு அல்லது புதைப்பதற்கு முன்போ உடலை துணி கொண்டு முழுவதுமாக மூடிவிடுவதால் உறுப்பு தான அறுவை சிகிச்சையின் எந்த ஒரு தழும்போ அடையாளங்களோ தெரியாது.

### முதிந்த வயது, நோய் அல்லது உடல் குறைபாடுகள் இருந்தால் உறுப்பு தானம் செய்ய இயலாது.

மருத்துவகுழு பரிசோதனைகள் மூலம் உடல் உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சைக்கு உபயோகப்படுமா இல்லையா என்பதை தீரமதிப்பிட்டே முடிவு செய்கின்றனர். உறுப்புதானம் தர தகுதியற்றதாக கருதப்பட்ட சர்க்கரைநோய் மற்றும் கல்லீரல் வைரஸ் வியாதிகள் போன்றவை அறிவியல் ரீதியாக தானம் தர தடை இல்லை என நிரூபிக்கப்பட்டுள்ளன.

### உறுப்பு தான உறுதி மொழி எடுத்தால், எனது நிலையை/ மனதை மாற்றி கொள்ள முடியாது.

உறுதி மொழி எடுத்தால் உறுப்பு தானம் செய்தேதீர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உங்கள் முடிவை எப்போதும் மாற்ற முடியும். உங்கள் பதிவை ரத்து செய்யலாம், உங்கள் உறுப்புதான உறுதிமொழி பதிவு அட்டையை அழித்துவிடலாம். முக்கியமாக, உங்கள் குடும்பத்தினருக்கு உங்கள் முடிவைத் தெரிவிக்கலாம். உறுப்பு தானம் பற்றிய இறுதி முடிவு எப்போதுமே குடும்பத்தினரின் முழுசம்மதத்துடன் எடுக்கும் கூட்டு முடிவே. இது எந்நேரமும் மாறுதலுக்கு உட்பட்டது.

**உறுப்பு தானத்தை ஊக்குவிப்போம்! உறுதிமொழி எடுப்போம்!**

காவேரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள பதிவங்களிலோ அல்லது இந்த **QR code** – ஐ ஸ்கேன் செய்தோ உறுப்பு தான உறுதி மொழி எடுக்கவும்.

| No.1, K.C. Road, Tennur, Trichy-17. | No.6, Royal Road, Cantonment, Trichy-1. | Heartcity No.52, Alexandria -Road, Cantonment, | No. 27, Alexandria Road, Cantonment, Trichy-1. |
|---|---|---|---|

**Ph : 0431 - 4077 777**

www.kauveryhospital.com

info.kauveryhospital.com